2nd November 1962]

ATHUR TALUK.

(9) Veeraganur.

(c) In addition to the nine centres mentioned above, three centres were also sanctioned to be established in Hosur taluk during 1961–62 and the centres have been started at the following places :

(1) Kundamaranpalli.
(2) Thalli.
(3) Avalapalli.

Building works for these centres will be taken up and completed when the lands become available. The working of the schemes has resulted in increasing the quality of sheep in the area and educating the people of the area in proper Sheep Husbandry practices.

Dairy farm

* 1074 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal for setting up an experimental farm and dairy in the State, with the Co-operation of the Government of Denmark?

THE HON. SRI P. KAKKAN : There is no proposal for setting up an experimental farm and dairy in this State with the co-operation of the Government of Denmark.

திரு. வை. சங்கரன் : *இதுபோன்று ஒரு திட்டம் மைசூர் அரசாங்கத்தாலே வகுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பின்பற்றி நம்முடைய ராஜ்யத்திலும் அத்தகைய ஏற்பாடு செய்து, பயன் பெற அரசாங்கம் உத்தேசிக்குமா ?*

கனம் திரு. பூ. கக்கன் : *அந்த மாதிரி ஏற்பாடு இப்போது இல்லை.*

* 1075 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to open a cattle farm at Kesavapuri near Valliyoor, Nanguneri taluk, Tirunelveli district?

THE HON. SRI P. KAKKAN : There is a proposal to establish a farm in Tirunelveli district during the Third Five-Year Plan period. The exact place of location has not yet been decided.

திரு. வை. சங்கரன் : *அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் அந்த இடத்திலே அதற்கான பூர்ண வாய்ப்புக்களும், வசதிகளும் இருக்கிறது என்று முறையிட்டார்களே, அதை சர்க்கார் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா ?*

கனம் திரு. பூ. கக்கன் : *இடம் பார்த்திருக்கிறார்கள். இன்னும் ஒன்றும் செய்யவில்லை. திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலிலே ஒரே ஒரு தீர்மானம் மட்டும் செய்திருக்கிறார்கள். அதிலே கேசவன்நல்லூர் பக்கத்திலே 700 ஏக்கர் இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அதைப்பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் எவ்வித முடிவும் எடுக்கவில்லை.*

[2nd November 1962

திரு. ந. சௌந்திரபாண்டியன் : அரசாங்கத்திலிருந்து கேசவ நேரியில் வைக்க முடியாது என்று பதில் அனுப்பப்பட்டு இருக்கிறதா? அதாவது அங்கே தண்ணீர் இல்லை, அதன் காரணமாக அங்கே வைக்க முடியாது என்று பதில் கொடுத்திருக்கிறார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே ஒரு இடத்தைப் பார்த்து பரிசீலனை செய்திருக்கிறார்கள். அபிஷேகப்பட்டியில் நெல்லையப்பர் கோவிலுக்குச் சொந்தமாக ஏற்கனவே ஒரு டயரி பாரம் கூட்டுறவு சொஸைட்டி அடிப்படையில் நடந்து கொண்டிருக்கிறது. இப்போது அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதைப் பரிசீலிக்காமல் அரசாங்கம் எவ்வித பதிலையும் சொல்ல முடியாது.

திரு. ந. சௌந்திரபாண்டியன் : அரசாங்கத்திலிருந்து அங்கு போதுமான தண்ணீர் வசதி இல்லையென்று பதில் வந்திருக்கிறது. ஆனால், புதைப்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி செய்ததிலே அங்கே அதிகமாகவே தண்ணீர் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இதை அரசாங்கம் தீவிரமாக பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அங்கே தண்ணீர் இருக்கிறதா, இல்லையா என்ற தகவல் என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால், அதற்கு பதில் சொல்ல முடியும்.

District boards (residuary staff)

* 1076 *Q.*—SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) what is the work of residuary staff of the defunct District Boards; and

(*b*) what is the position of staff working under the Regional Inspector of Local Boards?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The residuary staff sanctioned to the districts is for attending to the work left resultant on the abolition of the district boards, such as, transfer of assets and liabilities of the district boards to the Panchayat Unions, closure of the Provident Fund accounts of the former district board employees and their transfer to the Panchayat Unions, settlement of audit objections, etc.

(*b*) The staff working under the former Regional Inspectors of Municipal Councils and Local Boards have now been ordered to be absorbed in the newly formed Panchayat Development Branches in the District Collectorates and Panchayat Development Sections in divisional offices and constituted into a separate unit to be administered by the Collector of the district pending the constitution of a service in which these posts will be encadred.